**மதவாச்சி பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2019 ஏப்ரல் 2 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆம் திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜுன் 12 ஆந் திகதியும், தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ரத்தோட்ட பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வீதவரி மற்றும் வரி வருமானம் ரூபா 2,590,040 ஆக இருந்த போதிலும், வரவு செலவுக் கணக்கிற்கிணங்க ரூபா 2,322,613 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்ததனால் ரூபா 267,427 குறைவாகக் கணக்கிடப்பட்டிருந்தது. | நிதி ஆண்டுக்குரிய வருமானம் நிதி அறிக்கைகளில் சரியாகக் காண்பிக்கப்பட வேண்டும். | பி.ச 04 இணங்க வருடத்தின் வீதவரி மற்றும் வரி வருமானம் ரூபா 2,322,613 ஆகும். |
| (ii) | மீளாய்வாண்டில் பொது கழிவறை குத்தகை வரியின் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 570,000 ஆக இருந்த போதிலும், வருமானச் செலவுக் கணக்கில் ரூபா 191,250 ஆகக் | நிதி ஆண்டுக்குரிய வருமானம் நிதி அறிக்கைகளில் சரியாகக் காண்பிக்கப்பட வேண்டும். | மீளாய்வாண்டில் ரூபா 570,000 பட்டியலிடப்பட்ட வருமானத்தை ஒவ்வொரு மாதமும் அறவிடும் போது பி.ச 04 அறிக்கையில் நிகழ்ந்த குறைபாடுகளின் காரணமாக இந்த வித்தியாசம் தோன்றியிருக்கிறது. இந்தத் தவறு இனிமேல் நிகழாதிருக்க |

| | | | |
|---|---|---|---|
| | காண்பிக்கப்பட்டிருந்ததால் ரூபா 378,750 குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | நடவடிக்கை எடுக்கிறேன். |
| (iii) | மீளாய்வாண்டில் ஒப்பந்த குத்தகை வரி மற்றும் வாரச் சந்தை பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 703,230 ஆக இருந்த போதிலும் வருமானச் செலவுக் கணக்கில் ரூபா 4,211,226 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்ததோடு ரூபா 492,004 குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதி ஆண்டுக்குரிய வருமானம் நிதி அறிக்கைகளில் சரியாகக் காண்பிக்கப்பட வேண்டும். | பி.ச 04 வருமான அறிக்கையின் செலவு தொகை மாறியிருந்ததால் ரூபா 492004 வித்தியாசம் செலவு தொகைகளில் குறிப்பிடப்படாததால் நிகழ்ந்த தவறை சரி செய்ததன் மூலம் இந்த வித்தியாசம் ஏற்பட்டிருப்பதை தயவுடன் அறியத் தருகிறேன். |
| (iv) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை முத்திரை வரி வருமானத்தைக் இனங கண்டு அல்லது மதிப்பிட்டு கணக்கில் சேர்த்துக் கொண்டிருக்கப்படவில்லை. | நிதி ஆண்டுக்குரிய முத்திரை வரி கண்டறியப்பட்டு அல்லது மதிப்பிடப்பட்டு நிதி அறிக்கைகளில் சரியாகக் காண்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். மீளாய்வாண்டிற்குரிய வருமானத்தைக் கண்டறிந்து கணக்கில் சேர்த்துக் கொள்கிறேன். |
| (v) | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வேறு வருமானம் ரூபா 670,477 ஆக இருந்த போதிலும் வருமான செலவு கணக்கில் ரூபா 880,458 ஆக காண்பிக்கப்பட்டிருந்ததால் ரூபா 209,981 மேலதிகமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதி ஆண்டுக்குரிய வருமானம் நிதி அறிக்கைகளில் சரியாகக் காண்பிக்கப்பட வேண்டும். | பி.ச 04 எழுதும் போது தொகை மாறியிருந்ததால் இந்த வித்தியாசம் உருவாகியிருக்கிறது. இனிமேல் கிடைக்கும் வருமானங்களை அதற்குரிய கணக்கில் கணக்கிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (vi) | மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருந்த ரூபா 202,585 முத்திரைக் கட்டண வரி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு செலுத்த வேண்டிய பொறுப்பாகக் காண்பிக்கபட்டிருக்க வில்லை. | பொறுப்புகள் கண்டறியப்பட்டு அவை சரியாக நிதியறிக்கைகளில் காண்பிக்கப்பட வேண்டும். | இந்தப் பணத் தொகை வருமானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மீண்டும் வருவாய் ஆணையர் ஜெனரலுக்கு சரியான விதத்தில் காலாண்டுக்கு ஒரு தடவை செலுத்தி வரப்பட்டிருக்கிறது. இனி வரும் காலத்தில் இந்தக் கொடுக்கல் வாங்கலை சரியான விதத்தில் கணக்கிட நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (vii) | தேசிய கடன் மற்றும் அபிவிருத்தி நிதியிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடனுக்குரிய மீளாய்வாண்டின் வட்டி ரூபா 1,302,352 வருமான செலவுக் கணக்கில் செலவாகக் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | கடன்களை மீளச் செலுத்துவதுவும், அதற்குரிய வட்டிகளைச் செலுத்துவதும் சரியாகக் கண்டறியப்பட்டு கணக்கிடப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். வருடாந்த தவணைக் கொடுப்பனவுகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் ஆகியவற்றை வெவ்வேறாகக் கண்டறிந்து கணக்கிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (viii) | மீளாய்வாண்டில் ஊழியர் ஓய்வூதிய கொடுப்பனவு மற்றும் உபகாரக் கொடுப்பனவுக்கான செலவு ரூபா 48,444 வருமான செலவுக் கணக்கில் கணக்கிடப் பட்டிருக்க வில்லை. அவ்வாறே திசெம்பர் 31 ஆம் திகதிக்கு செலுத்தப்பட வேண்டிய ஊழியர் ஓய்வூதியக் கொடுப்பனவு மற்றும் உபகாரக் கொடுப்பனவு பெறுமதி ரூபா 1,356,742 திசெம்பர் 31 வரையான தொகை நிலுவைத் தாளில் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை. | நிதி ஆண்டுக்குரிய செலவுகள் மற்றும் இருப்பு நிலைக் குறிப்பு தினத்துக்குரிய பொறுப்பில் சரியாக கணக்கிடப்பட்டு காட்டப்பட வேண்டும். | உள்ளூராட்சி ஓய்வூதியக் கொடுப்பனவுகள், ஓய்வூதிய மற்றும் உபகாரக் கொடுப்பனவுகளுக்கான செலவு (கடனளிப்பவராக) கணக்கிடப்பட்டு நிலுவைத் தொகையை தவணை முறையில் வழங்கவும் மாதாந்த தவணைகளை ஒழுங்கான முறையில் செலுத்தவும் நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ix) | 2017 ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்த திட்டங்கள் 8 இற்குரிய செலுத்தப்படாதிருந்த கையிருப்பு பட்டியல் தொகை ரூபா 2,447,475 மீளாய்வாண்டில் மூலதனச் செலவாக கணக்கிடப்பட்டிருந்தது. | நிதி ஆண்டுக்குரிய செலவுகள் மாத்திரம் வருமான செலவுக் கணக்கில் காண்பிக்கப்பட வேண்டும் என்பதோடு முந்தைய ஆண்டுகளுக்குரிய செலவுகள் கண்டறியப்பட்டு பொருந்தச் செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2017.12.31 திகதிக்கு இந்தத் தொகைகள் கடன் கொடுத்தவர்களாகக் கண்டறியப்படாததால் நிகழ்ந்த தவறைச் சீராக்கம் செய்யப்படும் |
| (x) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை உடைத்து அகற்றப்பட்ட பொது வர்த்தக நிலையத்தின் கடைகளுக்கான வைப்புத் | இருப்பு நிலைக் குறிப்பில் அனைத்து பொறுப்புக்களும் சரியாகக் | ஏற்றுக் கொள்கிறேன். சீராக்கம் செய்யப்படும் |

| | | | |
|---|---|---|---|
| | தொகை ரூபா 80,508 மற்றும் புர நெகும வர்த்தக வளாகத்திலிருந்த கடைகளுக்கான வைப்புத் தொகை ரூபா 7,874075 பொறுப்புக்களாக இருப்பு நிலைக் குறிப்பில் காண்பிக்கப்பட்டிருக்கவில் லை. | கணக்கிடப்பட்டு காண்பிக்கப்பட வேண்டும். | |
| (xi) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை தொழில்துறை இடைநிறுத்தம் ரூபா 1,946,336 பெறுமதி வேறு வைப்பாகக் காண்பிக்கப் பட்டிருக்கையில் அந்தத் தொகை தொழில்துறை கடன் கொடுத்தவர்களாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | பொறுப்புகள் இரண்டு தடவைகள் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருப் பதை சரி செய்தல் வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். எதிர்வரும் காலத்தில் தவறுகளைச் சீராக்கம் செய்யப்படும் |

**(ஆ) பொருந்தாத கணக்குகள்**

---------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | -------------------------- | ----------------------- | ------------------------- |
| (i) | 2018 திசெம்பர் 31 வரை கணக்கு துறைகளில் 05 இற்கு ஆவணங் களுக்கிணங்க பெறுமதி ரூபா 2,797,831 ஆக இருந்ததோடு நிதி அறிக்கைகளில் ரூபா 12,149,762 ஆக காண்பிக்கப்பட்டிருந்ததால் ரூபா 9,351,931 கூட்டு வேறுபாடு காணப்பட்டது. | சம்பந்தப்பட்ட மீதிகளில் வேறுபாடுகள் பொருந்தச் செய்யப்பட்டு கணக்கைச் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். சம்பந்தப்பட்ட ஆவணங்களிலும் நிதி அறிக்கைகளிலும் மீதிகளில் வேறுபாடு உருவாகியிருப்பது ஆவணங்களில் தகவல்கள் சரியாகக் குறிப்பிடப்படாமையாலும், கவனயீனமாக விடப்பட்டமையாலும் ஆகும். |
| (ii) | 2018 திசெம்பர் 31 வரை கணக்கு துறைகள் 02 இன் இறுதிக் கணக்கில் ரூபா 28,681,424 காண்பிக்கப்பட்டிருந்ததோடு அவற்றுக்குரிய உப ஆவணங்களுக்கிணங்க மீதி ரூபா 50,778,291 ஆக இருந்ததனால் ரூபா 22,293,149 கூட்டு வேறுபாடு காணப்பட்டது. | சம்பந்தப்பட்ட மீதிகளில் வேறுபாடுகள் பொருந்தச் செய்யப்பட்டு கணக்கைச் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். இறுதிக் கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகளுக்குரிய உப ஆவணங்களிலுள்ள வேறுபாடுகளைச் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2018 திசெம்பர் 31 வரை செலுத்தப்பட வேண்டிய தேசிய கடன் நிதிகளின் மீதி ரூபா 13,166,875 ஆக இருந்த போதிலும், இருப்பு நிலைக் குறிப்பில் அத் தொகை ரூபா 11,711,648 ஆக காண்பிக்கப் பட்டிருந்ததால் ரூபா 1,455,227 வேறுபாடு காணப்பட்டது. | சம்பந்தப்பட்ட வேறுபாடுகள் கண்டறியப்பட்டு சரி செய்யப்பட வேண்டும். | தேசிய கடன் நிதி நிலுவைத் தாளை விடவும் தேசிய கடன் நிதி கணக்கின் மீதி அதிகரித்துள்ளமை கடன் தவணைக் கட்டணத் தொகையோடு வட்டித் தொகையும் வெவ்வேறாகக் கணக்கிடப்படாமையால் ஆகும். மீண்டும் கணக்கினைத் தயாரிக்கும்போது அந்தத் தவறைச் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**(இ) கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**………………………………………………………………………**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 வரை 5 வருடங்கள் கடந்தும் முன் கொண்டு வரப்பட்டிருக்கும் ரூபா 19,030,983 பெறுமதி கொண்டு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகள் 08 அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது சம்பந்தமான தரவுகளைத் திரட்டிக் கொண்டிருப்பதோடு எதிர்வரும் வருடத்தில் இந்த கணக்கு மீதியைத் தீர்த்திருப்பேன். |
| (ii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 வரை 09 வருட காலமாக முன் கொண்டு வரப்படும் நிதி அறிக்கைகளில் காணப்படும் ரூபா 1,062,284 செலுத்த வேண்டிய கணக்கு மீதிகள் 05 கொடுத்துத் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய தொகையைக் கொடுத்துத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது சம்பந்தமான தரவுகள் திரட்டப்பட்டுக் கொண்டிருப்பதோடு இயலுமான அளவு விரைவாக உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் ஒப்படைத்து அவரது அறிவுறுத்தல்களுக்கிணங்க கணக்கு மீதியைத் தீர்ப்பேன். |

**(ஈ) கணக்காய்வுக்குத் தேவையான எழுத்து மூலமான சான்றுகள் காணப்படாமை**

**……………………………………………………………………………………**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 168,008,715 பெறுமதியுடைய கணக்கு துறை 12 இற்குரிய சொத்து | நிதி அறிக்கைகளில் காண்பிக்கப்படும் | 2019 ஆம் ஆண்டிற்குரிய கணக்கோடு அவற்றை சமர்ப்பிக்கிறேன். |

| | |
|---|---|
| ஆவணங்கள், உரிமைச் சான்றிதழ்கள், மதிப்பாய்வுத் திணைக்கள அறிக்கைகள் மற்றும் விரிவான உப ஆவணங்கள் முன்வைக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமான முறையில் மெய்மையாய்வு செய்ய முடியவில்லை. | பெறுமதியை உறுதிப்படுத்தத் தேவையான எழுத்து மூல அத்தாட்சிகள் முன்வைக்கப்பட வேண்டும். |

**1.4 இணங்காமைகள்**

…………………

**சட்டங்கள், நிதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

…………………………………………………………………

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | ------------------------- | ------------------------- | ------------------------- | ------------------------- |
| (i) | 1951 இலக்கம் 14 மோட்டார் வாகன சட்டம் 203 அதிகாரம் | சபைக்குரிய டெ.்.பே ட்ரக்டர் வண்டியும் தண்ணீர் பவுசரும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | சட்டத்திற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வாகனங்களைப் பதிவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பேன் என்பதை அறியத் தருகிறேன். |
| (ii) | 1987 இலக்கம் 10 ஐக் கொண்ட பிரதேச சபை சட்டத்தின் 92 ஆவது பிரிவு மற்றும் 2008 இலக்கம் 13 ஐக் கொண்ட மாடுகளைக் கொல்தல் சம்பந்தமான (திருத்தப்பட்ட) சட்டம் - 272 அதிகாரத்தின் 18 ஆவது பிரிவு | மஹ சியம்பலாகஸ்கட மற்றும் முஸ்லிம் ஹல்மில்லேவ ஆகிய பிரதேசங்களில் தனியார் இடங்களில் காணப்பட்ட மாடுகள் கொல்லப்படும் 02 இடங்கள் அனுமதிச் சான்றிதழ் இல்லாமலேயே நடத்திக் கொண்டு செல்லப்பட்டிருந்தன. | சட்டத்திற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மஹசியம்பலாகஸ்கட மற்றும் முஸ்லிம் ஹல்மில்லேவ பிரதேசங்களிலிருக்கும் இறைச்சிக் கடைகள் 2018 வருடத்திலேயே விலைமனுக் கோரப்பட்டிருந்தன. |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 1988 பிரதேச சபை (நிதி நிர்வாகம்) விதிகள் கையேடு ………………… விதிகள் 217 மற்றும் 218 | சபைக்குரிய இடங்கள் கட்டடங்கள் தொடர்பான P.S. 46 உப விதியின் பிரகாரம் ஆவணம் பேணப்படாததோடு அனைத்து இடங்கள் மற்றும் கட்டடங்கள் ஒவ்வொரு வருடத்துக்கு ஒரு தடவையாவது பரிசோதிக்கப்பட்டிருக்கவில்லை. | விதிகளுக்கிணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இடங்கள் மற்றும் கட்டடங்கள் தொடர்பான ஆவணமொன்று பேணப்படுவதோடு அந்த இடங்களையும் கட்டடங்களையும் கூடிய விரைவில் மதிப்பீடு செய்து ஆவணத்தைப் புதுப்பிக்கத் தேவையான நடவடிக்கையை எடுக்கிறேன். |
| (iv) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணங்கள் ………………… நி. பி 454(2) | அனைத்து கட்டிடங்களினதும் மின்சார சாதனங்கள் குறித்த ஆவணமொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதி பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கட்டிடங்கள் தொடர்பான ஆவணமொன்று பேணப்பட்ட போதிலும், அனைத்து கட்டிடங்களும் மதிப்பீடு செய்யப்பட்டிருக்காததால் புதுப்பிக்க இயலவில்லை. |
| (v) | பொது நிர்வாக சுற்றறிக்கை ………………… 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்க சுற்றறிக்கையின் 3.1 பந்தி | சபைக்குரிய வாகனங்கள் 08 சம்பந்தமான எரிபொருள் எரிதல் சோதனை பற்றிய பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். வாகனங்களுக்கு தற்போது எரிபொருள் எரிதல் சோதனை நடத்த நடவடிக்கை எடுத்திருக்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (vi) | அரச பெறுகை செயற்பாடு மற்றும் வழிகாட்டல் கையேடு …………. 2.1 ஆம் பிரிவு | | | |
| | | பிரதேச சபை நூலகத்தின் முதல் மாடியைக் நிர்மாணிப்பதற்காக ரூபா 5,105,608 செலவு மதிப்பீட்டில் நூலகக் கணினிக்காகப் பயன்படுத்தப்படும் ரூபா 1,550,950 தளபாட உபகரணங்கள், தொலைத்தொடர்பு அமைப்புகள் மற்றும் திரைச்சீலைகள் போன்ற பொருட்கள் 212 இற்கு 20% இலாப வீதம் அடங்கிய இரண்டு வகைகளுக்குரிய உள்ளீட்டு கொள்வனவு ஒரே செலவு மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டு ஒரே கட்டுமான ஒப்பந்தக்காரரிடம் கட்டுமான வேலைகளுக்காகவும், பொருட்களை வழங்குவதற்காகவும் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | வழிகாட்டல் கையேட்டுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செயற்திட்டத்துடன் தொடர்புடைய கொள்வனவு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையைத் தயாரிப்பதுவும், இந்தப் பணியில் சேவை வழங்குனரும் (Employer) உள்ளூராட்சித் திணைக்களமாகும். ஒப்பந்ததாரரினால் முன் வைக்கப்பட்ட விலை மனுக்கள் குறைந்த பெறுமதியுடைய விலை மனுக்கள் எனக் கருதி பிரதேச சபை செயலாளரினால் மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறியத் தருகிறேன். |
| | 6.3.3 ஆம் பிரிவு | பிரதேச சபை நூலகத்தின் முதல் மாடியைக் நிர்மாணிக்கும் செயற் திட்டத்தின் பெறுகை குழுவுக்கு குறைந்த பட்சம் கொள்வனவுக் குழுவால் அங்கீகரிக்கப்படும் உறுப்பினர்கள் இருவராவது இருக்க வேண்டும் என்ற போதிலும், விலை மனுவைத் தொடங்குதல் உள்ளூராட்சித் திணைக்களத்தின் நிதி அதிகாரியால் நடைபெற்றிருந்தது. | வழிகாட்டல் கையேட்டுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செயற்திட்டத்துடன் தொடர்புடைய கொள்வனவு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையைத் தயாரிப்பதுவும், இந்தப் பணியில் சேவை வழங்குனரும் (Employer) உள்ளூராட்சித் திணைக்களமாகும். ஒப்பந்ததாரரினால் முன் வைக்கப்பட்ட விலை மனுக்கள் குறைந்த |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | பெறுமதியுடைய விலை மனுக்கள் எனக் கருதி பிரதேச சபை செயலாளரினால் மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறியத் தருகிறேன். |
| (vii) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் மற்றும் 2011 நவம்பர் 10 ஆம் திகதிய 2045 ஆம இலக்க வர்த்தமானி அறிவித்தல் | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேச சபைக்குரிய தெருக்களின் சரளைக் கற்கள், மணல் மற்றும் கருங்கல் 12639.5 கனஅடி அளவு கொண்டு செல்ல ரூபா 1,263,950 பெறுமதியான கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். சரி செய்து கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

……………..

### 2.1 நிதி விளைவுகள்

…………………

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 320,733 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,136,497 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

---

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

---

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,258,910 | 2,266,365 | 2,179,640 | 1,201,821 | 2,163,353 | 2,763,525 | 3,827,582 | 1,115,096 |
| (ii) | வாடகை | 13,283,400 | 6,027,630 | 6,387,150 | 2,007,016 | 9,353,900 | 10,165,525 | 7,798,989 | 2,366,536 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள | 4,776,560 | 5,178,613 | 5,178,613 | 505,700 | 3,600,900 | 5,113,661 | 4,607,961 | 505,700 |
| (iv) | ஏனைய வருமானம் | 2,316,285 | 2,226,392 | 7,652,004 | 2,121,221 | 3,312,755 | 3,292,397 | 503,131 | 7,546,833 |
| | மொத்தம் | 22,635,155 | 15,699,000 | 21,397,407 | 5,835,758 | 18,430,908 | 21,335,108 | 16,737,663 | 11,534,165 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

……………………..

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 33 பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை ரூபா 1,201,821 நிலுவை வீதவரி வரியை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிலுவையிலுள்ள வீதவரி வரிகளை உடனடியாக அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். இப்போதுள்ள வரையில் அது சம்பந்தமான ஆவணங்களைத் தயாரித்து நிலுவைத் தொகையை அறவிட நடவடிக்கை எடுத்து வருகிறேன். |
| (ஆ) | 2005 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டின் வீதவரி வரி அறவிடப்பட்டிருந்த போதும் 13 ஆண்டு களுக்கான அத்தியாயத்தில் புதிய கட்டுமானம், திருத்தங்கள் ஆகியவற்றின் பிரகாரம் வரிகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சுற்றறிக்கையில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் 05 வருடங்களுக்கு ஒரு தடவை சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு வீதவரி வரிகள் அறவிடப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2019.04.05 அன்று நடைபெற்ற மாதாந்த பொதுக் கூட்டத்தில் மீண்டும் சொத்துக்களை மதிப்பிடுவதற்கு சபை தீர்மானம் எடுத்திருப்பதோடு அதற்கிணங்க நடவடிக்கை எடுத்து வருகிறேன். |

**2.2.3 வாடகைகள்**

……………

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ---------------------------- | ------------------------ | -------------------------- |
| (அ) | புறநெகும செயற் திட்டத்தின் கீழ் வட மத்திய மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தினால் நிர்மாணிக்கப்பட்டு 2017 ஜூலை 20 ஆம் திகதி சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த 46 கடைகளில் 40 கடைகள் வாடகைக்குக் கொடுக்கப்பட்டிருந்ததோடு சம்பந்தப்பட்ட அந்தக் கடைகளுக்கு மின்சார வசதியை ஏற்படுத்திக் கொடுக்க சபை எவ்வித நடவடிக்கையையும் மேற் கொள்ளாததால் மீளாய்வாண்டில் ரூபா 7,015,000 வருமானத்தை இழக்க நேர்ந்துள்ளது. | உடனடியாக மின்சார வசதியையும் ஏனைய அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்து வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிக்க பொருத்தமான சூழலை சபை அமைத்துக் கொடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். மின்சார வசதியைப் பெற்றுக் கொடுக்காததால் வர்த்தக நடவடிக்கைகளுக்காக கடைகளைத் திறக்க முடியவில்லை. தற்போது மின்சார வசதியை ஏற்படுத்திக் கொடுக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) | சபைக்குரிய 54 கடைகளிலிருந்து 2018 திசெம்பர் 31 வரை கிடைக்க வேண்டிய கடை வாடகை ரூபா 1,041,843 பணத் தொகையும் இறைச்சிக் கடை, மீன் கடை ஆகியவற்றிலிருந்து அறவிடப்பட வேண்டிய வரி நிலுவை ரூபா 1,037,693 பணத் தொகையும் அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடை வாடகை நிலுவைத் தொகையையும், குறிப்பிடப்பட்டுள்ள வரிகளையும் உடனடியாக அறவிடவோ அல்லது சந்தர்ப்பங்களில் சட்ட நடவடிக்கைகளோ எடுக்கப்பட வேண்டும். | வர்த்தக நிலைய வளாகத்தில் 54 கடைகளிலிருந்து 2018 ஆம் ஆண்டில் அறவிடப்பட வேண்டிய கடை வாடகைகள் அனைத்தும் அறவிடப்பட்டுள்ளதோடு 05 வருடங்களுக்கும் மேலாக நிலுவையிலிருக்கும் பழைய மீதியான ரூபா 1,042,343 பணத் தொகையை நீக்கி விடும் கட்டளைக்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |

**2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இப் பிரதேசத்திலிருக்கும் விளம்பர பதாதைகள் சம்பந்தமாக ஆய்வொன்றை நடத்தி அவற்றுக்குரிய கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருடத்தின் ஆரம்பத்தில் ஆய்வொன்றை நடத்தி கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விளம்பரப் பதாதைகள் குறித்து ஆய்வொன்றை நடத்தி அவை சம்பந்தமான ஆவணமொன்றைத் தயாரித்து கட்டணங்களை அறவிட உடனடியாக நடவடிக்கை எடுத்து வருகிறேன். |
| (ஆ) | சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இருக்கும் தொலைபேசி சேவை பரிமாற்றக் கோபுரங்களின் எண்ணிக்கை குறித்த ஆய்வொன்றை நடத்தி அவற்றிலிருந்து உரிம கட்டணங்களை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருடத்தின் ஆரம்பத்தில் ஆய்வொன்றை நடத்தி கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இருக்கும் தொலைபேசி சேவை பரிமாற்றக் கோபுரங்களின் எண்ணிக்கை 18 என்று கண்டறியப்பட்டுள்ளதோடு அவற்றிற்கான கட்டணங்களை அறவிடத் தேவையானவை தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறியத் தரப்பட்டிருக்கிறது. |

**2.2.5 ஏனைய வருமானங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017, 2018 ஆண்டுகளுக்குரிய கிடைக்க வேண்டியிருந்த முத்திரைக் கட்டணப் பெறுமதியைக் கணக்கிட்டு அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முத்திரைக் கட்டண வருமானத்தை உடனடியாக அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். மாகாண இறைவரி திணைக்களத்திலிருந்து அறியத் தந்ததும் முத்திரைக் கட்டணத்தை கணக்கிட நடவடிக்கை எடுக்கிறேன். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் மக்களுக்கான பாதைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும், மக்களின் நலன், வசதிகள், நலன்புரிகள் உள்ளிட்ட சபை நிறைவேற்ற வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

(அ) உப விதி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் அனுமதிக்கப்பட்ட 28 விடயங்களை நிறைவேற்றுவதற்காக 2018 திசெம்பர் 31 வரை சம்பந்தப்பட்ட விடயங்கள் குறித்த துணை விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | துணை விதிகளை விதித்து பிரதேச சபை சட்டத்தை செயற்படுத்த சபை நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாகாண சபையால் இயற்றப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கும் துணை விதிகள் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிப்பதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. |

(ஆ) செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்கான செயற் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | அனைத்து செயற்பாடுகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. |

(இ) செயற்பாடுகளைச் செய்வதிலுள்ள தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் மாகாணத்தில் வரையறுக்கப்பட்ட அபிவிருத்தி அனுமதியின் கீழ் ரூபா 1,000,000 முன்னேற்பாட்டில் இல 77 துலான லிந்தவெவ பிரதான பாதையானது 2018 திசெம்பர் 15 திகதிக்கு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லையாதல ால் அக் கொடுப்பனவு விலக்கப்பட்டதுடன் சபை நிதிக்கு ரூபா 440,820 நஷ்டம் ஏற்பட்டிருந்தது. | அபிவிருத்தி வேலைத் திட்டங்களைச் செயற்படுத்தும் போது ஒப்படைக்க வேண்டிய மற்றும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தை அடையும் முன்பு அந்த வேலைத் திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கேற்ற விதத்தில் சபை உற்சாகமாக செயலாற்ற வேண்டும். | உள்ளூராட்சித் திணைக்களத்தின் சம்பந்தப்பட்ட மாகாணத்தில் வரையறுக்கப்பட்ட அபிவிருத்தி அனுமதியின் கீழ் எம்மிடம் ரூபா 1,000,000 முற்கொடுப்பனவாக தரப்பட விருப்பதாக எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனினும் அந்தத் தொகை பின்னர் ரூபா 500,000 ஆக குறைக்கப்பட்டு எம்மிடம் வழங்கப்படப் போவதாக எமக்கு அறியத் தரப்பட்டிருக்கிறது. |

(ஈ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**
……………………………………….

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் 2018 ஆம் ஆண்டுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 பிரகாரம் அடைய வேண்டிய நோக்கங்கள் மற்றும் இலக்குகள் குறித்து அறிந்திருக்கவில்லை. | 2030 நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைவதற்குத் தேவையான நடவடிக்கைகளும், பணிகளும் சபையால் செய்யப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 2030 குறித்து அறியத் தரப் படவில்லை. |

**3.2 மனித வள முகாமைத்துவம்**
………………………………..

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 வரை ஆரம்ப மட்ட பதவிகள் 04 இல் 07 வெற்றிடங்களும், இரண்டாம் மட்ட பதவிகள் 06 இல் 07 வெற்றிடங்களும், 02 பதவிகள் மேலதிகமாக இருந்ததோடு சாதாரண ஊழியர்கள் 10 பேர் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தார்கள். | பதவிகளிலுள்ள வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டு செயற்பாட்டுத் திறன் அதிகரிக்கப்பட வேண்டும். | சேவையை நிறைவேற்றும் தேவை அடிப்படையில் சாதாரண ஊழியர்கள் 10 பேர் உள்ளூராட்சி ஆணையாளரின் ஒப்புதலின் கீழ் இணைக்கப்பட்டுள்ளார்கள். மேலதிகமாகக் காணப்படும் பதவிகள் 02 இல் ஒரு பதவி அலுவலகத் தொழிலாளர் பதவியாகும். அந்தப் பதவி தற்போது அலுவலக வேலை உதவியாளர் பதவியாக மாற்றப்பட்டிருக்கிறது. |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**
-----------------------------------------

**சொத்துக்களை பதிவேடுகளுக்கு உட்படுத்தாதிருத்தல்**
---------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1978 திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்கம் கருவூல சுற்றறிக்கையின் பிரகாரம் பேணப்பட வேண்டிய நிலையான சொத்துக்கள் பதிவேடு | நிலையான சொத்துக்கள் ஆவணம் புதுப்பிக்கப்பட்டு பேணப்பட | நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்படுவதோடு அந்த சொத்துக்களை மதிப்பீடு செய்து புதுப்பிக்கத் தேவையான நடவடிக்கைகள் |

| | | |
|---|---|---|
| சபைக்குரிய சொத்து வகைகள் 18 மதிப்பீடு செய்யப்பட்டு ஆவணப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். சபைக்குரிய அனைத்து சொத்துக்களும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டும். | எடுக்கப்பட்டு வருகின்றன. |

## 3.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டில் இப் பிரதேசத்தில் மாத்திரம் மாட்டிறைச்சி விற்பனை செய்வதற்காக ரூபா 1,903,600 பெறுமதியான பணத் தொகைக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்த சியம்பலாகஸ்கட மற்றும் முஸ்லிம் ஹல்மில்லேவவில் அமைந்திருக்கும் இறைச்சிக் கடைகள் 02 இற்காகப் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருந்த மாடுகளைக் கொல்லும் இடத்தில் சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலிருந்த இறைச்சிக் கடைகள் இரண்டிற்காக 76 மாடுகள் மாத்திரம் கொல்லப்பட்டிருந்ததோடு கொழும்புக்கு 105620 கிலோகிராம் இறைச்சியை அனுப்பி வைப்பதற்காக 1234 மாடுகள் கொல்லப்பட்டிருந்தன. மிகவும் குறைந்த பெறுமதிக்கு வாங்கப்பட்டிருந்த இந்த இறைச்சிக் கடைகள் இரண்டிற்கான விலைமனுக் கோரலைப் பயன்படுத்தி அனுமதியற்ற வியாபாரத்துக்கு சபை இடம் கொடுத்திருந்தது. | வருடாந்தக் குத்தகைக்கு வழங்கப்பட்ட இறைச்சிக் கடைக்காகப் பயன்படுத்தப்படும் குறிப்பிட்ட அந்த மாடுகளைக் கொல்லுமிடங்களிலிருந்து வேறு இறைச்சிக் கடைகளுக்கும், பிரதேசத்தின் எல்லைக்குட்படாத இடங்களுக்கும் இறைச்சியை அனுப்பி வைப்பதற்காக மாடுகள் கொல்லப்பட்டு நடைபெறும் அனுமதியற்ற வியாபாரத்தை சபை தலையிட்டு நிறுத்த வேண்டும். | முஸ்லிம் ஹல்மில்லேவ மற்றும் மஹா சியம்பலாகஸ்கட இறைச்சிக் கடைகள் ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் அந்தக் கிராமங்கள் இரண்டிலும் சம்பந்தப்பட்ட இடங்களில் அவ் விலங்குகளைக் கொல்ல அனுமதியளிக்கப்பட்டிருந்தது. |

**3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நூலகத்துக்காக இரண்டு வகைகளுக்குரிய உபகரணங்கள் 210 ஐ வழங்குவதற்கு சந்தை விற்பனை விலையில் 20மு விலைக் கழிவோடும் மற்றும் தொலைத் தொடர்பு சாதனங்களை பொருத்துவதற்கும் ரூபா 1,627,000 உயர்வாகக் கணிப்பிடப்பட்டதற்கிணங்க விலைகளை முன் வைத்த போது இரண்டு வகைகளுக்குரிய உபகரணங்கள் 210 ஐ வழங்குவதற்கான விலை 20% இலிருந்து 40% வரையும் அதிகரிக்கப்பட்டிருந்ததோடு தொலைத் தொடர்பு சாதனங்களுக்காக ரூபா 450,000 ஆன 90% விலைகள் குறைத்துக் காண்பிக்கப்பட்டு ஒப்பந்தப்படி ரூபா 1,550,000 விலை கொடுத்து 210 உபகரணங்கள் மாத்திரம் வழங்கப்பட்டு தொலைத்தொடர்பு சாதனங்கள் பொறுத்தப்படாமையால் முழுமையாக 1,060,833 பெறுமதி கொண்ட நஷ்டம் கண்டறியப்பட்டிருக்கிறது. | கவனயீனம் காரணமாக நிகழ்ந்திருக்கும் நிதியிழப்புக் காரணமான அனைவரிடமிருந்தும் இழப்பிற்குரிய பெறுமதி அறவிடப்பட வேண்டும். | அச் செயற்திட்டத்திற்குரிய கொள்வனவு செயற்பாடு உள்ளூராட்சித் திணைக்களத்தினூடாகவே நடைபெற்றது. தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கை தயாரிக்கப்பட்டதுவும் கூட உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஊடாகத்தான் என்பதோடு இந்த வேலையின் வேலை வழங்குநரும் (Employer) உள்ளூராட்சித் திணைக்களமாகும். |

**3.6 பெறுகை**

**பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | இனி வரும் காலத்தில் பெறுகைத் திட்டமானது தயாரிக்கப்படுமென அறியத் தருகிறேன். |